**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.407/2015 வா.சா. 2 முருகேசன்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 20.02.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) எனக்கு நீதிமன்ற அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். நான் என்ன படித்து உள்ளேன் என்றால் 10 ஆம் வகுப்பு படித்து உள்ளேன். வாதி வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளார் என எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் காபிலிபாளையத்தில் உள்ளது. வாதி என் உறவினர் என்றால் சரியல்ல அவர் என் குடும்ப நண்பர் அவரை ஒரு 20 ஆண்டுகளாக தெரியும்.

2) வாதிக்கு யார் கிரையம் செய்து கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வாதிக்கு 1ம் பிரதிவாதி செல்லமுத்து கவுண்டர் தான் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். நீதிமன்றம் மூலம் கிரையம் கொடுத்தார். வாதி 1ம் பிரதிவாதியிடம் பாக பிரிவினை கோரிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் வாதி அது பற்றி தொலைபேசியில் பேசும் போது கேட்டு உள்ளேன். நான் சொல்வது போல் ஏதும் நடக்கவில்லை என்றும் வாதி என் நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம்/-(மு.ச. ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி